# புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள் 05

ஜூன் 2024

## கர்த்தர் கற்பித்த ஜெபம்

**ஒருவேளை...**

- பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்காதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*பரமண்டலங்களிலிருக்கிற*" என்று...
- எனக்காக மட்டும் வாழ்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*எங்கள்*" என்று...
- பிதாவின் பிள்ளையெனச் செயல்பட ஒவ்வொரு நாளும் பிரயாசங்கள் எடுத்துக்கொள்ளாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*பிதாவே*" என்று...
- பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கு நாடாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக*" என்று...
- இராஜ்யம் வருவதற்காக என்னால் செய்யமுடிந்த காரியங்கள் அனைத்தையும் செய்யாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*உம்முடைய இராஜ்யம் வருவதாக*" என்று...
- அவரது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக*" என்று...
- இங்கு, இப்பொழுது அவருக்கு ஊழியம் செய்யாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக*" என்று...
- வேறு ஆதாயங்களுக்காக/காரியங்களுக்காக வஞ்சகமாய் அல்லது தந்திரமாய் நாடுபவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்*" என்று...
- ஒருவருக்கு விரோதமாக பகையை மனதில் வைத்துக்கொண்டிருப்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்*" என்று...
- தீமையின் பாதையில் நானே போய் நின்றுகொண்டிருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்* " என்று...
- தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துகொள்ளாதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்*" என்று...
- உண்மையுள்ள குடிமகனென இராஜாவுக்குக் காண்பிக்கப் பாத்திரமான நேர்மையினை கொண்டிராதவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*இராஜ்யம் உம்முடையது*" என்று...
- மனுஷன் என்ன செய்துவிடுவானோ என்று அஞ்சுபவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*வல்லமை உம்முடையது*" என்று...
- எனக்காக மட்டும் மகிமையினை தேடிக்கொள்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*மகிமை உம்முடையது*" என்று...
- எனது வாழ்க்கையினை, என் கால வரையறைக்குள் முழுவதும் அடக்கிக்கொள்பவனாக நான் இருப்பேனேயாகில், ஜெபிக்க இயலாதே எந்தனால்: "*என்றென்றைக்கும் உம்முடையவைகளே*" என்று...

*-Devotions*
*Bible Student's Library*